# அறிவித்தல்

**வெளிநாடுகளில் இருக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்குரிமையை வழங்குவதற்கான ஒரு முறையை வகுத்தமைப்பதற்காக வெளிநாடுகளில் இருக்கின்ற தூதராண்மைக் குழுக்கள்/ தூதுவராலயங்கள், சிவில் சமூக ஒழுங்கமைப்புகள் மற்றும் வெளிநாடுகளில் இருக்கின்ற இலங்கைப் பிரஜைகளின் கருத்துக்களையும் யோசனைகளையும் அழைத்தல்**



- வெளிநாடுகளில் இருக்கின்ற இலங்கைப் பிரஜைகளின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்கான முறைசார்ந்த ஒரு முறைமையை வகுத்தமைப்பதற்கான சிபார்சுகளை முன்வைப்பதற்காக அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.
- அதில் மிகவும் ஜனநாயக ரீதியான, வெளிப்படைத்தன்மையான மற்றும் வினைத்திறனான ஒரு முறையை வகுத்தமைப்பதற்காக வெளிநாடுகளில் இருக்கின்ற இலங்கை தூதராண்மைக் குழுக்கள்/ தூதுவராலயங்கள், சிவில் சமூக ஒழுங்கமைப்புகள், பொது மக்கள் அடங்கலான ஆர்வமுள்ள தரப்பினர்களின் எழுத்திலான யோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ள குழு முடிவு செய்துள்ளது.

**அதன் அடிப்படையில்;**

**பின்வரும் துறைகள் மீது விசேட கவனம் செலுத்தி தங்களது கருத்துக்களையும் யோசனைகளையும் 2026.02.15 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு/ மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு குழு வேண்டிக்கொள்கிறது.**

- தேருநர்களைப் பதிவுசெய்தல்
- பிரச்சாரம்
- வாக்களித்தல்
- வாக்கெண்ணலும் முடிவுகளை வெளியிடுதலும்


: வெளிநாடுகளில் இருக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதை இயலச் செய்யும் வகையிலான ஏற்பாடுகளைச் செய்வதற்காக சிபார்சுகளை முன்வைக்கும் பொருட்டு அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் நியமிக்கப்பட்ட குழு,
சட்டப் பிரிவு,
இல.330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.
இலங்கை

**: legal@pclg.gov.lk**

**: 94+112302720**


இச்செயன்முறையை திறம்பட நிறைவேற்றுவதற்காக உங்களது பெறுமதியான கருத்துக்களை கௌரவத்துடன் எதிர்பார்க்கின்றோம்.


**பி.பீ.சி.குலரத்ன,**
தலைவர்,
வெளிநாடுகளில் இருக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதை இயலச்செய்யும் வகையிலான ஏற்பாடுகளைச் செய்வதற்காக சிபார்சுகளை முன்வைக்கும் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் நியமிக்கப்பட்ட குழு